கூட்டுறவு தேர்தல் / மிக அவசரம்

ந.க.92/2013/CE-5 (4) நாள். 11.03.2013

ஐயா,

பொருள்: தேர்தல் – கூட்டுறவுச்சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் அறிவுரைகள் வழங்குதல்- (படிவம் 18) ஒதுக்கப்பட்ட இடம் மற்றும் பொது இடம்- தொடர்பாக.

வேட்புமனு தாக்கல் படிவம் 18-ல் வரிசை எண் 2-ல் வாக்காளர் தொகுதியின் பெயர் (ஏதேனும் இருப்பின்) என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், நிர்வாகக்குழுவில் சட்டப்பிரிவு 33 (1)ன்கீழ் 30% பெண்களுக்கும், 18% ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், வேட்புமனுத் தாக்கல் செய்யும்போது, பெண்/ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/பொது ஆகிய இடங்களில் தான் போட்டியிடும் இடத்தைப் பற்றிக் குறிப்பிடவேண்டியது அவசியமானதாகிறது என்றும் மாவட்டத் தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சியின்போதும், மாநிலத் தேர்தல் அலுவலர்களுக்கான கூட்டங்களின்போதும் தெரிவிக்கப்பட்டன.

இதனை தேர்தல் ஆணையம் நன்கு பரிசீலனை செய்ததில் படிவம் 18-வரிசை எண்.2க்கு நேரே வேட்புமனுத்தாக்கல் செய்பவர், தான் போட்டியிடும் இடத்தைப் பற்றி (பெண்/ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/பொது) தெளிவாக எழுத வேண்டியது அவசியம் என்பதும், இதன் மூலம் அவர் எந்த இடத்திற்குப் போட்டி இடுகிறார் என்பதைத் தெளிவாக அறியமுடியும் என்று தேர்தல் ஆணையம் கருதுகிறது.

எனவே படிவம் 18-ல் வேட்புமனுவில் வரிசை எண்.2-க்கு நேராக வேட்பாளர் தான் போட்டியிடும் இடம் பெண் அல்லது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லது பொது ஆகியவற்றில் எவ்வகைப்பட்டது என்பதனையும், இது தவிர சங்கத் துணைவிதிப்படி வேறு வகைப்படுத்தப்பட்ட தொகுதிகள் இருப்பின் அதனையும் தெளிவாக நன்கு குறிப்பிடவேண்டும். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை தேர்தல் அலுவலர் நன்கு உறுதி செய்து கொள்ளவேண்டும்.

இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றி உடன் தெரிவித்திடக் கோரப்படுகிறது.

(ஒம்../-) ம.ரா. மோகன்
ஆணையர்

பெறுநர்:
மாநிலத் தேர்தல் அலுவலர்கள்.